# தாரமங்கலம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரண கூட்டம்

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாத கூட்டத்தொடர் 27.02.2025 ஆம் தேதி வியாழன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தாரமங்கலம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**முன்னிலை :– திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகராட்சி மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

**பொருள் எண்.921 (1)**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் நிகழப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| டிசம்பர் | 9 | 7 | 16 | 6 | 3 | 9 | 0 | 0 | 0 |
| ஜனவரி 01.01.2025 முதல் 20.02.2025 | 4 | 1 | 5 | 10 | 8 | 18 | 0 | 0 | 0 |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.550/2023/எச்1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.922 (2)**

தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 27 வார்டு பகுதிகளிலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, உரிமக்கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் 2024–2025 ஆம் ஆண்டிற்கான வரி வசூல் 100 சதவீதம் முடிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் 31.12.2024 மற்றும் 07.01.2025 ஆம் தேதி காணொளி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து, ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய DPA-570 ஆம்பயர்–1, ஆர்ன் SUH25-2, ஒயர்–10 மீட்டர் கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.15,000/– ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.53/2024/எச்1)
2. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.923 (3)**

தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1 முதல் 27 வார்டுகளுக்கு பொதுசுகாதாரம் பணிகளை மேற்கொள்ள 2024–2025 ஆம் ஆண்டிற்கு (01.09.2024 முதல் 30.11.2024 முடிய) 3 மாதங்களுக்கு விலைப்புள்ளி கோரி R.G.Enterprises என்ற நிறுவனத்திற்கு 14.08.2024 ஆம் தேதி சுகாதாரப்பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் மழைக்காலமாக உள்ளதாலும், குளிர்கால தேவையை முன்னிட்டு பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி பிளிச்சிங் பவுடர் சுண்ணாம்புத்தூள், கருப்பு பினாயில், லைசால் கொள்முதல் செய்வதற்கு அவசர அவசியம் கருதி R.G.Enterprises என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய (01.12.2024 முதல் 28.02.2025 வரை) மேலும் 3 மாதங்களுக்கு மேற்கொண்ட பொருட்களை கொள்முதல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.11/2022/எச்1)
2. பொதுசுகாதாரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தூய்மை பணிக்கு பொதுசுகாதார பொருட்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.924 (4)**

தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள வார்டுகளுக்கு பொதுசுகாதாரப்பிரிவு கீழ் தினசரி கொரோனா மற்றும் டெங்கு வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிக்காக வீடு வீடாக சென்று காய்ச்சல் கணக்கெடுப்பு பணிக்கு தற்காலிகமாக DBC பணிக்கு வீரதமிழச்சி மகளிர் குழு 13 நபர்கள் மற்றும் ஜான்சி ராணி மகளிர் குழு 14 நபர்கள் கொண்ட ஆக மொத்த 27 நபர்களுக்கு 6 மாதம் (ஆகஸ்ட்–2024 முதல் ஜனவரி–2025 வரை) ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு குறைந்தபட்ச விலைப்புள்ளி அடிப்படையில் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி 6 மாத காலம் முடிவடைந்து விட்டதால், பொதுசுகாதாரத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு பொதுசுகாதாரம் பணிகள் மேற்கொள்ள ஜான்சிராணி மகளிர் குழு, மற்றும் வீரதமிழச்சி மகளிர் குழு இரண்டிற்கும் மூன்று மாதம் பணி நீட்டிப்பு செய்திடவும் (பிப்ரவரி–2025 முதல் ஏப்ரல்–2025 வரை)

அதற்குரிய செலவினத்தொகை நாள் ஒன்றிற்கு ஊதியம் ரூ.498 X 27 நபர் ஒன்றிற்கு ரூ.13446/– க்கு 26 நாள் X ரூ.13446/– = ரூ.349596/–க்கு (EPF 13% 1 நபர் ரூ.68 X 27 நபர் = ரூ.459 = ரூ.1836 26 நாட்களுக்கு X ரூ.1836 = ரூ.47736/–க்கு (EPF 3.25% 1 நபர் ரூ.17 X 27 நபர் = ரூ.459 = 26 நாள் X 27 ரூ.12393 ஒரு மாதம் ஊதியத்தில் சேர்த்து வழங்க வேண்டிய தொகை ரூ.349596+47736+12393 =ரூ.409727/–க்கு மேற்கண்ட கணக்கீட்டின் படி மூன்று மாதங்களுக்கான மொத்த செலவின தொகை ரூ.1229181/–க்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.07/2023/எச்1)
2. தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்கன்குனியா நோய் பரவலை தடுக்க 27 நபர்கள் கொண்ட வீரத்தமிழச்சி மற்றும் ஜான்சி ராணி மகளிர் சுய உதவி குழுவிற்கு பணி உத்தரவு வழங்க (EPF, ESI தொகையுடன்) மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.925 (5)**

தாரமங்கலம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 முதல் 27 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் குப்பை கழிவுகளை சேகரம் செய்யும் பணியினை வாகனங்கள் மற்றும் பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம் பிரித்து அதனை இறுதியாக்கம் செய்யும் பணியினை RSK Tech Traders (P) Ltd Thuraiyur to Uppliyapuram main Road,Venkatachalapuram,Thuraiyur TK.Trichy Dt என்ற நிறுவனம் மேற்கொண்டு வந்த நிலையில் 30.11.2024 ஆம் தேதி முதல் தங்கள் பணியை முடித்துக்கொள்வதாக, கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து, பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேலும் இரண்டு மாத காலத்திற்கு (டிசம்பர்–2024 மற்றும் ஜனவரி–2025) அந்நிறுவனம் மூலமாகவே பணியினை மேற்கொள்ளுமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பொதுசுகாதாரத்தின் அவசர அவசியத்தினை கருதி மேற்கண்ட பணியினை மேற்கொள்ள புதியதாக ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு உரிய அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.04/2024/எச்1)
2. பொதுசுகாதாரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்காணும் பணிக்கு புதிய ஒப்பந்தபுள்ளி கோர அனுமதி வழங்ககோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப நகர்மன்ற தலைவர் முன் அனுமதி வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.926 (6)

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.26, கீழ்சின்னாக்கவுண்டம்பட்டி, சர்வே எண்.244/3—ல், உள்ள மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைப்பதை எதிர்ப்பு தெரிவித்து திரு.A.சாமிநாதன், வழக்கறிஞர் என்பவரால் ஓமலூர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.O.S.No.220/2015-னை நகராட்சி சார்பில் ஏற்று நடத்தியமைக்கு திரு.P.கதிரவன், வழக்கறிஞர், ஓமலூர் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.10,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம் (கோ.எண்.86/2022/அ2)
2. மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.927 (7)

தாரமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் நடைபெற்று வரும் தூய்மை பாரத இயக்கம் 2.O விளம்பரம் மற்றும் 2024—2025—ஆம் ஆண்டின் திட்டப் பணிகள் குறித்த நாளிதழ் விளம்பரம் வரப்பெற்றுள்ளது விளம்பரம் கட்டணம் வழங்க கோரி வரப்பெற்றுள்ள விபரம் கீழ்க்கண்டவாறு.

| .வ. எண் | பணியின் விபரம் | நாளிதழ் பெயர் | கட்டணத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | தாரமங்கலம்நகராட்சி திடக்கக்கழிவு மேலாண்மை குப்பையில்லா நகராட்சியாக அங்கீகாரம் வழங்குவது குறித்து | கல் பப்ளிகேஷன், 22,CC ரோடு, சேலம். | 6720/— |
| 2. | தூய்மை இந்தியா திட்டம் தாரமங்கலம் நகராட்சி திடக்கக்கழிவு மேலாண்மை குப்பையில்லா நகராட்சியாக அங்கீகாரம் வழங்குவது குறித்து | கல் பப்ளிகேஷன், 22,CC ரோடு, சேலம். | 5040/—<br>5040/— |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் தாரமங்கலம் நகராட்சி திடக்கக்கழிவு மேலாண்மை குப்பையில்லா நகராட்சியாக அங்கீகாரம் வழங்குவது குறித்து | தினத்தந்தி ,நெ.6 ஓமலூர் ரோடு, சேலம். | 8366/- |
| 4. | தாரமங்கலம் நகராட்சி திடக்கக்கழிவு மேலாண்மை குப்பையில்லா நகராட்சியாக அங்கீகாரம் வழங்குவது குறித்து | தினத்தந்தி ,நெ.6 ஓமலூர் ரோடு, சேலம். | 6972/- |
| 5. | தாரமங்கலம் நகராட்சி திடக்கக்கழிவு மேலாண்மை குப்பையில்லா நகராட்சியாக அங்கீகாரம் வழங்குவது குறித்து | காலைக்கதிர் 855, நியூ ஃபேர்லேண்ட்ஸ், | 2835/— |

| | | | |
|---|---|---|---|
| | | சேலம்–16. | |
| 6. | மனித கழிவுகளை அகற்றுதல் வழக்கு எண்.W.P.324/2020 | தினத்தந்தி ,நெ.6 ஓமலூார் ரோடு, சேலம். | 8568.00/- |
| 7 | தாரமங்கலம் நகராட்சியில் 2024–2025–ஆம் ஆண்டின் திட்டப்பணிகள் குறித்த விபரம் | கல் பப்ளிகேஷன், 22,CC ரோடு, சேலம். | 8,064/- |
| 8. | தாரமங்கலம் நகராட்சி திடக்கக்கழிவு மேலாண்மை குப்பையில்லா நகராட்சியாக அங்கீகாரம் வழங்குவது குறித்து | தினத்தந்தி ,நெ.6 ஓமலூார் ரோடு, சேலம். | 8,366/- |
| 9. | தாரமங்கலம் நகராட்சியில் 2024–2025–ஆம் ஆண்டின் திட்டப்பணிகள் குறித்த விபரம் | மாலை தமிழகம், நெ.G.8,Phase 1. Anubhav SSR pankajam enclave,No.24,Arunachalam Road, saligramam,chennai | 23,100/- |
| 10. | தூய்மை பாரத இயக்கம் 2. O –2024–2025 ஆம் ஆண்டின் ஆறாவது உயர்மட்ட குழுகூட்டம் மற்றும் ஏழாவது உயர்மட்ட குழுகூட்டம் திட்டம் | கல் பப்ளிகேஷன், 22,CC ரோடு, சேலம். | 9424/- |
| 11. | தாரமங்கலம் நகராட்சியில் 2024–2025–ஆம் ஆண்டு நடைபெற்று வரும் பணிகளின் விபரம் | கல் பப்ளிகேஷன், 22,CC ரோடு, சேலம். | 9,975/- |
| | | **மொத்தம் ரூ.** | 102470/- |

மேற்கண்டவாறு திட்டப்பணிகள் குறித்து நாளிதழ் விளம்பரம் வரப்பெற்றதற்கான கட்டணத்தொகை வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.781/2023/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.928 (8)**

தாரமங்கலம் நகராட்சியின் 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை LED மின்விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பொறியியல் பிரிவில் LED மின்விளக்குகளை பராமரிப்பு செய்ய போதிய ஆட்கள் இல்லை. வெளிக்கொணர்வு முறையில் பராமரிப்பு செய்திட இரண்டு நபர் தேவைப்படுகின்றது. இந்நகராட்சியில் மின் பணியாளர் நியமனம் செய்யும் வரை பராமரிப்பு பணிக்கு பணியாளர் தேவைப்படுகின்றனர். பராமரிப்பு பணிக்கு பணியாளருக்கு ஊதியம் PWD Schedule of Rate விகிதப்படி நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.902/–

வழங்கி வெளிக்கொணர்வு முறையில் பணியாளர் நியமனம் செய்திடவும், 6 மாதங்கள் உத்தேச செலவினம் ரூ.3.80/—ஆகும். மேற்கண்ட பணிக்கு பணியாளர் நியமனம் செய்திடவும், செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.231/2025/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.929 (9)**

தாரமங்கலம் நகரின் முக்கிய தேர்திருவிழா அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் தைப்பூச திருவிழா தேர் ஓட்டம் தொடர்பாக சார் ஆட்சியர், மேட்டூர் அவர்களால் 23.01.2025 அன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. தேர் திருவிழாவிற்கு பொதுமக்களின் நலன் கருதி தேர் செல்லும் இடங்களில் சாலைகள் சீரமைக்க சார் ஆட்சியர் அவர்களால் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கைலாசநாதர் கோவில் முதல் காவல் ஆய்வாளர் அலுவலகம் வரை சாலைகளை சீரமைப்பு செய்திட உத்தேச செலவினம் ரூ.7.00/—ஆகும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் செலவினத்தினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.36/2025/இ1)
2. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.930 (10)**

தாரமங்கலம் நகரின் முக்கிய தேர்திருவிழா அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் தைப்பூச திருவிழா தேர் திருவிழா தொடர்பாக சார் ஆட்சியர், மேட்டூர் அவர்களால் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. தேர்திருவிழாவிற்கு பொதுமக்களுக்கு குடிநீர் வசதிகள் செய்து தர ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தேர்விழாவிற்கு பொதுமக்களுக்கு சின்டெக்ஸ் டேங் அமைத்து குடிநீர் விநியோகம் வழங்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.2.80/—

ஆகும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், செலவினத்தினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. தேர்திருவிழா குடிநீர் வசதி ஏற்படுத்திட அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.87/2024/இ1)
2. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.931 (11)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.13, நல்லகிணறு பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. அறிவுசார் மையத்திற்கு நூலகத்தினுள் நாள்தோறும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மாணவர்களின் நலன் கருதி Sitting Chair மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியன மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.20/– ஆகும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் செலவினத்தினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.37/2025/இ1)
2. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.932 (12)**

தாரமங்கலம் நகராட்சி, நல்ல கிணறு பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், நூலகம் (ம) அறிவுசார் மையம் கட்டிடம் கட்டப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் Smart class மற்றும் அறிவுசார் மையம் கட்டிடம் பாதுகாப்பிற்கு CCTV Camera அமைக்க உத்தேச செலவினம் ரூ.4.90/– ஆகும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் செலவினத்தினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.228/2025/இ1)

2. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.933 (13)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு வளர்ச்சி திட்ட நிதி ஆகிய திட்டங்களின் கீழ், 10 எண்ணிக்கையிலான உயர் மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. 10 எண்ணிக்கையிலான உயர் மின் கோபுரங்களை 2025–2026 ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்புகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.00/– ஆகும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் செலவினத்தினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.934 (14)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.18, முத்து முனியப்பன் கோவில் தெரு பகுதியில் திறந்த வெளியில் கிணறு அமைந்துள்ளது. பொதுமக்களின் நலன் கருதி அக்கிணற்றினை சுற்றி கருங்கல் தடுப்புச்சுவர் அமைத்தல் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/– இலட்சம், மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.234/2024/இ1)
2) மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.935 (15)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.11, சங்ககிரி மெயின்ரோடு காடையாம்பட்டி முதலி தெரு, வடிவேல் முதலி தெரு, பரணி மெடிக்கல்ஸ் ஆகிய பகுதியிலுள்ள கல்வெட்டுகள் பழுதடைந்து கழிவுநீர் தேக்கம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பகுதிகளிலுள்ள கல்வெட்டுகளை சரிசெய்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.10/–இலட்சம் ஆகும். மேற்கண்ட

பணியினை மேற்கொள்ளவும், செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.16/2025/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.936 (16)**

தாரமங்கலம் நகராட்சி, 1 முதல் 27 வார்டுகளிலும் சாலை பதிவேடுகள் தவறுதலாக UTIS மென்பொருளில் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், தவறுதலாக உள்ளதாகவும், நகர்மன்ற கூட்டங்களில் சரிசெய்ய கோரிக்கை விடுத்ததையடுத்து, சாலை பதிவேட்டை சரிபார்க்கும் பணி நகராட்சி தொழில்நுட்ப உதவியாளர்களை கொண்டு துவங்கப்பட்டதில் வார்டுகளில் சாலை வரைபடம் மற்றும் UTIS மென்பொருளில் பதிவேற்றத்தை கன்சல்டன்சி மூலம் பணிகளை செய்து முடிக்க இதற்கான உத்தேச செலவினம் ரூ.2.10/—இலட்சம் ஆகும். இதற்கான செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.76/2024/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.937 (17)**

தாரமங்கலம் நகராட்சியின் பயன்பாட்டிற்கு தூய்மை பாரத இயக்கம் 2.O 2022—2023—ஆண்டின் திட்டத்தின் கீழ் கழிவுநீர் வாகனம் 1 எண்ணிக்கையில் வாகனம் ABT Industries Limited Madurai கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு வாகன காப்பீடு, வாகன பதிவு கட்டணம், மற்றும் போக்குவரத்து செலவு ஆகிய செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. வாகனத்திற்கு வாகன காப்பீடு, வாகன பதிவு கட்டணம், மற்றும் போக்குவரத்து செலவு ஆகியன பெறவேண்டியுள்ளதற்கு, திட்ட நிதியில் போதிய நிதி இல்லாததால், செலவினம் கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் மேற்கண்ட செலவினம் தொகை ரூ.1.25/—இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.1176/2023/இ1)

2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.938 (18)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு 23, சண்முகா நகர் முன் பகுதி பிள்ளையார் கோவில் அருகில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து தண்ணீர் தேக்க நிலையிலுள்ளது. எனவே அப்பகுதியிலுள்ள மழைநீர் வடிகால் சரி செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/–இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.235/2024/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.939 (19)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.4, பெரியாம்பட்டி பகுதியில் 7th SHPC 2023-2024 -ஆண்டின் தூய்மை இந்தியா திட்டம் 2.o திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.18.00/– இலட்சத்தில் சமுதாய கழிப்பிடம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமுதாய கழிப்பிடம் அமைத்தல் பணியில் திட்ட மதிப்பீட்டில் போர்வெல் கொடுக்கப்படாததால் சமுதாய கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திட போர்வெல் அமைப்பதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00/– ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், நகராட்சியின் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத்தினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.160/2025/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.940 (20)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.1, கருக்குப்பட்டி அருந்ததியர் காலனி பகுதியில் 7th SHPC 2023-2024 -ஆண்டின் தூய்மை இந்தியா திட்டம் 2.O திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.18.00/– இலட்சத்தில் சமுதாய கழிப்பிடம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமுதாய கழிப்பிடம் அமைத்தல் பணியில் திட்ட மதிப்பீட்டில் போர்வெல் கொடுக்கப்படாததால் சமுதாய கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திட போர்வெல் அமைப்பதற்கான உத்தேச செலவினம் ரூ.2.50/– ஆகும்.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினத்தினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.160/2025/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.941 (21)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.2, சேவான்வளவு பகுதியில் 7th SHPC 2023-2024 - ஆண்டின் தூய்மை இந்தியா திட்டம் 2.o திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.18.00/– இலட்சத்தில் சமுதாய கழிப்பிடம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமுதாய கழிப்பிடம் அமைத்தல் பணியில் திட்ட மதிப்பீட்டில் போர்வெல் கொடுக்கப்படாததால் சமுதாய கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திட போர்வெல் அமைப்பதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00/– ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினத்தினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.942 (22)**

தாரமங்கலம் கிராமம் புல எண்.11/1, விஸ்தீரணம் 2.91.5 ஹெக்டர் தீர்வை 11.30 வேடப்பட்டி சேவான் வளவு பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் திட்டப்பணிக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய துறையின் மூலம் Consultant Establish இசைவாணை பெற வேண்டியுள்ளது. 3MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு Consultant Establish இசைவாணை பெறுவதற்கு ஆன்லைன் மூலம், வரப்பெற்ற கேட்பு தொகை ரூ.2.25/–இலட்சம் தொகையினை ஒப்பந்ததாரரால் தொகை செலுத்தப்பட்டுள்ளது. Consultant Establish இசைவாணை பெறுவதற்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய துறைக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ.2.25/–இலட்சத்தினை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.05/2023/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(நிராகரிக்கப்பட்டது)

**பொருள் எண்.943 (23)**

தாரமங்கலம் நகராட்சி, 1 முதல் 27 வார்டு பகுதிகளிலும் உள்ள குடிநீர் பைப்லைன் 2024–2025 ஆண்டின் இரண்டாம் கட்ட வருடாந்திர பராமரிப்பு பணி செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.4.90/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத்தினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.230/2024/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.944 (24)**

தாரமங்கலம் நகராட்சியின் 27 வார்டுகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 1 முதல் 15 வார்டு வரை 7 நபர்கள் மற்றும் 16 முதல் 27 வார்டு 7 நபர்கள் என்ற முறையில் நவம்பர், டிசம்பர், ஜனவரி –2025 ஆகிய மூன்று மாதங்களுக்கு குடிநீர் வெளிக்கொணர்வு ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் நகர்மன்ற கூட்டம் நடைபெறாததால் குடிநீர் விநியோக வெளிக்கொணர்வு ஒப்பந்தம் முடிவடையும் தருவாயில் உள்ளதால், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் அடிப்படை தேவை என்பதாலும், இப்பணியை பிப்ரவரி 2025– ஒரு மாதத்திற்கு அதே ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தினை ஒரு மாதம் நீடித்து வழங்கவும், மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.14/–இலட்சம் தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் அடிப்படை தேவை என்பதால், இப்பணியை பிப்ரவரி 2025–ஒருமாதத்திற்கு அதே ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தினை ஒரு மாதம் நீடித்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண்.1634/2024/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.945 (25)**

தாரமங்கலம் நகராட்சியின் 27 வார்டுகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணிஆண்கள் சுயஉதவிக்குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது 27 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் நகரின் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு வெளிக்கொணர்வு முறையில், (மார்ச், ஏப்ரல், மே–2025 ) ஆகிய மூன்று மாதங்களுக்கு 1 முதல் 14 வார்டு வரை (7 நபர்களுக்கு ) ரூ.4,75,000/– இலட்சம் மற்றும் 15 முதல் 27 வார்டு வரை (7 நபர்களுக்கு) ரூ.4,75,000/– இலட்சத்தில் மூன்று மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வெளிக்கொணர்வு முறையில் மூன்று மாதங்களுக்கு ஒப்பந்தம் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேலும் குடிநீர் விநியோகப் பணிகளுக்கான செலவினத்தினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

1. குடிநீர் விநியோக பணிக்கு வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, ஒப்பந்தம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.151/2024/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.946 (26)**

தாரமங்கலம் நகராட்சியின் 27 வார்டுகளில் பொதுமக்களுக்கு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் நீர்தேக்கம் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் Chlorination system அமையும் பணி தளத்தில் material-க்கு Shedஅமைக்கப்பட வேண்டியுள்ளது. தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே கீழ்க்கண்ட பணிதளத்தில் Shed அமைக்கப்படவுள்ளதற்கான உத்தேச செலவினம் விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண் | மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் அமைவிடம் | கொள்ளளவு | மதிப்பீடு (ரூ.இலட்சம்) |
|---|---|---|---|
| 1. | வாரசந்தை பேட்டை OHT மேல்நிலை நீர்தேக்கதொட்டி | 800000 | 60,000/– |
| 2. | கிழக்குபாவடிமேல்நிலை நீர்தேக்க தொட்டி | 200000 | 60,000/– |
| 3. | மேல்சின்னாக்கவுண்டம்பட்டிமேல்நிலை நீர்தேக்க தொட்டி | 100000 | 60,000/– |
| 4. | பாரக்கல்லூர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி | 100000 | 60,000/– |

மேற்காணும் செலவினத்தினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.947 (27)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.19, தெற்கு ரதவீதி பகுதியில் மழைநீர் வடிகாலிற்கு சிறுபாலம் உடைந்த நிலையில் உள்ளதால் போக்குவரத்திற்கு கட்டையை பயன்படுத்தி வருவதால், அப்பகுதி மக்களின் போக்குவரத்திற்கு அப்பகுதியில் சிறுபாலம் அமைத்திட உத்தேச செலவினம் ரூ.40,000/– ஆகும். மேற்கண்ட பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத்தினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.1078/2024/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.948 (28)**

தாரமங்கலம் நகரின் முக்கிய தேர்திருவிழா அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் தைப்பூச திருவிழா தேர் திருவிழாவிற்கு பொதுமக்களின் நலன் கருதி தேர் செல்லும் இடங்களில் சாலைகள் சீரமைக்க கைலாசநாதர் கோவில் முதல் காவல் ஆய்வாளர் அலுவலகம் வரை சாலைகளை சீரமைப்பு பணி மதிப்பீடு ரூ.7.00/–இலட்சத்திற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | சதவீதம் (%) |
|---|---|---|
| 1. | V & V Construction, Tharamangalam | 0.12% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | Palanisamy Civil Construction, Tharamangalam | 0.78% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3. | Sowjith Construction, Tharamangalam | 0.98% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.36/2024/இ1)

2. உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **(V&V Construction, Tharamangalam)** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.949 (29)**

தாரமங்கலம் நகரின் முக்கிய தேர் திருவிழா அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் தைப்பூச திருவிழா தேர் திருவிழாவிற்கு பொதுமக்களுக்கு குடிநீர் வசதிகள் செய்து குடிநீர் வழங்கிட தேர்விழாவிற்கு பொதுமக்களுக்கு சின்டெக்ஸ் டேங் அமைத்து குடிநீர் விநியோகம் வழங்கும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ) |
|---|---|---|
| 1. | Sri Ram Electrical & Agencies,Tharamangalam | **0.18%**<br>மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | Palanisamy Civil Construction, Tharamangalam | **1.20 %**<br>மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3. | Sowjith Construction, Tharamangalam | **1.30%**<br>மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.87/2024/இ1)
2. தேர்திருவிழா குடிநீர் விநியோக பணிக்கு குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **(Sri Ram Electrical & Agencies,Tharamangalam** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.950 (30)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.13, நல்லகிணறு பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையம் நூலகத்தினுள் நாள்தோறும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மாணவர்களின் நலன் கருதி Sitting Chair மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியன மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலை (ரூ) |
|---|---|---|
| 1. | Sri Ram Electrical & Agencies,Tharamangalam | ரூ.1,15,000/– விலை குறைவு |
| 2. | Palanisamy Civil Construction, Tharamangalam | ரூ.1,22,000/– விலை அதிகம் |
| 3. | Sowjith Construction, Tharamangalam | ரூ.1,30,000/– விலை அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.37/2024/இ1)
2. குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **(Sri Ram Electrical & Agencies,Tharamangalam** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.951 (31)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.6, சந்தை பேட்டை பகுதியில் ஆடு அடிக்கும் தொட்டி இறைச்சிக்கூடம் புதுப்பித்தல் பணி Capital Grant Fund-2024-2025 Phase-II திட்டத்தின் கீழ் பணி நடைபெற்று வருவதாக பொறியியல் பிரிவினரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணிகள் முடியும் வரை ஆடு அடிக்கும் தொட்டிக்கான (இறைச்சிக்கூடம்) 2025–2026 ஆம் ஆண்டு கேட்பினை கணினியில் நிறுத்தி வைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. 2025–2026 ஆம் ஆண்டு ஆடு அடிக்கும் தொட்டி கேட்பினை நிறுத்தி வைப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 141/2025/அ1)
2. பணி நிறைவு பெற்றவுடன் ஆடு அடிக்கும் தொட்டியினை ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணிமுடியும் வரை ஆடு வதை செய்ய தகுதியான மாற்று இடத்தை மன்றம் பரிந்துரை செய்யலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.952 (32)**

தாரமங்கலம் நகராட்சி, வரியில்லா இனமான வண்டிப்பேட்டை சுங்க வசூல் 11.03.2022 அன்று ஏலம் விடப்பட்டு 01.04.2022 ஆம் தேதி முதல் 31.03.2025 வரை மூன்றாண்டுகளுக்கு 15%

வரி உயர்வு செய்யப்பட்டு தற்போது 2024–2025 ஆம் ஆண்டு கேட்புத்தொகை மற்றும் ஜி.எஸ்.டி உடன் தொகை ரூ.7,25,930/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 2024–2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியுடன் வண்டிப்பேட்டை சுங்க வசூல் மூன்றாண்டு முடியவடைய உள்ளதால், மீண்டும் 2025–2026 ஆம் ஆண்டிற்கான வண்டிப்பேட்டை சுங்க வசூல் ஆண்டு குத்தகை இனத்தினை இந்நகராட்சியின் மூலம் பொது ஏலம் விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. 2025–2026 ஆம் ஆண்டிற்கு வண்டிப்பேட்டை சுங்க வசூல் ஆண்டு குத்தகை இனத்தினை ஏலம் விடுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 194/2025/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.953 (33)

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் ( 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35 ) பிரிவு 102, 102(அ), 103, 104,114, 114ஹ, மற்றும் 199 ன் படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 394ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், தாரமங்கலம் நகராட்சி பகுதியில் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான உப விதிகள் ஏற்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289–ன் படியும் நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III–ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உபவிதிகள் ஏற்படுத்தி உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் நாள் முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்குதல் குறித்த தாரமங்கலம் நகராட்சி உப விதிகள்

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் – (1) அட்டவணைகள் I, II, III–ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது

வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமம் இன்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது.

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், தாரமங்கலம் நகராட்சி நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1–இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் விண்ணப்ப கட்டணத்தினை எந்த ஒரு டிஜிட்டல் செலுத்துமுறை மூலமாகவோ அல்லது வங்கி வரைவோலை வாயிலாகவோ செலுத்தலாம் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுறிமம் சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம்–17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை 1–ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உரிமம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணபத்தாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18–இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1)–இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண்.289 உள் விதி (5)ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

i. உரிமம் பெறுபவர், 2019– ம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டட விதிகளுக்கு இணங்கி நடக்க வேண்டும்.

ii. நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்தாலும் தடைசெய்யப்பட்ட நடவடிக்கை எதனையும், உரிமம் வழங்கப்பட்ட வளாகத்தில் மேற்கொள்ளக்கூடாது.

iii. உரிமம் பெறுபவர், வளாகத்தின் தரையினை தளவரிசை அமைத்தோ அல்லது பிறவாறாகவோ உட்புக முடியாத வகையிலும், பொருத்தமான வடிகால் அமைப்புடனும் மற்றும் எல்லா நேரங்களிலும் ஒழுங்காகவும், நல்ல முறையிலும் பராமரிக்கச் செய்ய வேண்டும்.

iv. அந்த வளாகம் சரியாக இணைக்கப்பட்டு, பொருத்தமான நுழைவாயில்கள் மற்றும் வாயில்களுடன் ஏற்படுத்தப்பட வேண்டும்.

v. உரிமம் பெறுபவர், அந்த வளாகத்தினை சுத்தப்படுத்தச் செய்ய வேண்டும் மற்றும் எந்தவொரு அழுக்கு அல்லது குப்பை சேர்வதையும் தடுக்க வேண்டும்.

vi. உரிமம் பெறுபவர், 2016 – ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளின் அனைத்து வகையினங்களுக்கும் இணங்கி நடக்க வேண்டும்.

vii. உரிமம் பெறுபவர், மேற்படி வளாகத்தில் உள்ள ஒவ்வொரு கட்டடத்தின் சுவர்கள் மற்றும் கூரையின் உட்புறங்களின் ஒவ்வொரு பாகத்தினையும் வழக்கமான முறையில் வெள்ளையடிக்கவோ அல்லது வண்ணப்பூச்சு பூசவோ செய்ய வேண்டும்.

viii. உரிமம் பெறுபவர், சுத்தமான மற்றும் ஆரோக்கியமான குடிநீர் போதுமான அளவில் வழங்க வேண்டும்.

ix. உரிமம் பெறுபவர், மேற்படி வளாகத்தில் அல்லது அது தொடர்பாக செய்யப்படுகிற காற்றோட்ட மற்றும் ஒளியமைப்பு வசதிகளை அனைத்து நேரங்களிலும், நல்ல நிலையிலும், சிறந்த முறையில் செயல்படும்படியும் பராமரிக்கச் செய்ய வேண்டும்.

x. அந்த உரிமம் வழங்கப்பட்ட வளாகத்தில் ஒரு ஆய்வுப் புத்தகம் பராமரிக்கப்பட வேண்டும். அந்த ஆய்வுப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

xi. நகராட்சியால் வழங்கப்பட்ட உரிமம் ஒரு முக்கியமான இடத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

xii. உரிமம் பெறுபவர், அந்த பொதுக் கட்டடத்தில் 2019 – ம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டட விதிகளின்படி மூடியசுற்று தொலைக்காட்சி (CCTV) அலகுகளை நிறுவ வேண்டும்.

xiii. உரிமம் பெறுபவர், அறிவிப்பு ஏதுமின்றி, அந்த வளாகம் பயன்பாட்டில் இருக்கும் போது, பகல் அல்லது இரவு என, எந்தவொரு நேரமும், ஆணையாளர் அல்லது இது தொடர்பாக அவரால் அதிகாரமளிக்கப்படுகிற எந்தவொரு அலுவலராலும் மேற்கொள்ளப்படுகிற ஆய்வுக்கு, வளாகத்தினை பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

xiv. உரிமம் பெறுபவர், அத்தகைய வளாகங்களில், அனைத்து கழிவுப் பொருட்களையும் போடுவதற்கென, பொருத்தமான மூடப்பட்ட கொள்கலங்களை, பொருத்தமான இடங்களில் வைக்க வேண்டும் மற்றும் அத்தகைய கொள்கலங்களை குறைந்தது ஒவ்வொரு இருபத்திநான்கு மணி நேரத்திற்கும் ஒருமுறை சுகாதாரமான முறையில் காலி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

xv. அரசால் தடை செய்யப்பட்ட பொருள் எதுவும், வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தப்படவோ அல்லது விற்பனை அல்லது பயன்பாட்டுக்கென வெளியிடப்படவோ கூடாது.

xvi. தீ பாதுகாப்பு விதிமுறைகள் வரையறுக்கப்பட்டவாறு பின்பற்றப்பட வேண்டும்.

xvii. உரிமம் பெறுபவர், அத்தகைய வளாகத்தில் உள்ள ஒவ்வொரு கழிவறை மற்றும் நீர்மலக்கூட கட்டமைப்பின் ஒவ்வொரு பாகத்தினையும், அனைத்து நேரங்களிலும், ஒழுங்காகப் பராமரிக்க செய்ய வேண்டும் மற்றும் அத்தகைய கழிவறை அல்லது நீர்மலக்கூட கருவியின் ஒவ்வொரு பாகமும் மற்றும் அதிலிருந்து செல்லும் ஒவ்வொரு வடிகால் அல்லது வடிகால் அமைப்பு முறையும், அனைத்து நேரங்களிலும், நல்ல நிலையிலும் சிறந்த முறையில் செயல்படும்படியும் பராமரிக்கப்பட வேண்டும்.

xviii. உரிமம் பெறுபவர், அத்தகைய வளாகங்களை, குறைந்தது ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் ஒருமுறை, சுத்தமாக கூட்டி, கழுவி மற்றும் சுத்தப்படுத்தச் செய்ய வேண்டும் மற்றும் மூடப்பட்ட கொள்கலங்கள் தவிர, வேறு எங்கும் எந்வொரு அழுக்கு அல்லது குப்பையும் சேராமல் தடுக்க வேண்டும்.

xix. உரிமம் பெறுபவர், அனைத்து நேரங்களிலும், அத்தகைய வளாகங்களில் உள்ள ஒவ்வொரு கட்டடத்தினையும், எலிகள் அல்லது மற்ற கொறிக்கும் விலங்குகள் இல்லாமல் வைத்திருப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

xx. தொற்றுநோய் பாதிக்கப்பட்ட எவரும் வியாபாரம் செய்யக்கூடாது மற்றும் உரிமம் பெறுபவர் எவரும், அத்தகைய எந்தவொரு நபரையும் வியாபாரம் செய்வதில் அவருக்கு உதவி செய்ய பணியமர்த்தக்கூடாது.

xxi. உரிமம் பெறுபவர், அந்த வளாகத்தில் உள்ள எந்தவொரு நபரும் எந்தவொரு தொற்று அல்லது அபாயகரமான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிந்தவுடன், உடனடியாக, தொற்று பரவுதை தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் மற்றும் நகராட்சியின் பொதுச் சுகாதார அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும்.

xxii. உரிமம் பெறுபவர், வர்த்தகத்தின் கைகாட்டிப் பலகையினை தமிழில் காட்சிப்படுத்த வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் I–ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது , உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணை I, II மற்றும் III ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

விதி 289 கீழ் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமம் அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்துக்கு செல்லுபடியாகும் மற்றும் மேற்கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்துக் கொள்ளலாம்.

உரிமம் பெறாமலோ அல்லது புதுப்பிக்காமலோ தொழில் புரிவோரின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு 114, 114A மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 304 ன் படி நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு:– (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31 ம் தேதி முடிவடையும்.

**அட்டவணை I**

**[See Rules 289(1), (2) and (5)]**

**a. பொருந்தக்கூடிய தன்மை :**

1948 –ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXIII), 1951–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

**b. உரிமக்கட்டணம் :**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

a. விண்ணப்பதாரர், ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்கவில்லையெனில், அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும்

சேவைகள் வரி எண் (GST எண்) அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும்.

b. விண்ணபத்தாரர், ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவுச் சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில், உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து, படிவம் 17 ல் உள்ள பிரமாணப் பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்.

<u>அ) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)</u>

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500 | 3500 |

<u>ஆ) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)</u>

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500 | 5000 |

<u>இ) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)</u>

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500 | 10000 |

<u>ஈ) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை (ஒரு வருடத்திற்கான கட்டணம்)</u>

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10,000 | 35,000 |

<u>வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)</u>

| வ. எ | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (1500 – 3500) | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (3500 – 5000) | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (7500 – 10000) | மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (10000 – 35000) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1550/– | 3600/– | 7650/– | 10600/– |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1600/– | 3650/– | 7700/– | 10700/– |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 1600/– | 3650/– | 7700/– | 10500/– |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1650/– | 3700/– | 8000/– | 10800/– |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 1650/– | 3600/– | 7500/– | 10200/– |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1500/– | 3500/– | 7500/– | 10200/– |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 1550/– | 3700/– | 7700/– | 10300/– |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 1600/– | 3700/– | 7700/– | 10250/– |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 1650/– | 3650/– | 7700/– | 10350/– |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள்(மின் மோட்டர்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1700/– | 3850/– | 8300/– | 10800/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 1800/– | 4000/– | 8800/– | 11500/– |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1650/– | 3700/– | 8000/– | 10500/– |
| 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1600/– | 3700/– | 7800/– | 10500/– |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1600/– | 3600/– | 7750/– | 10500/– |
| 15 | செங்கல் சூளைகள் | 1600/– | 3600/– | 7700/– | 10500/– |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1650/– | 3600/– | 7750/– | 10800/– |
| 17 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களை உற்பத்தி செய்தல் | 1600/– | 3500/– | 7600/– | 10500/– |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1850/– | 3850/– | 7850/– | 10850/– |
| 19 | அனைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 1600/– | 3700/– | 7800/– | 10800/– |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் | 1600/– | 3600/– | 7700/– | 10600/– |
| 21 | அனைத்து வகையான இரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 1650/– | 3700/– | 7700/– | 10600/– |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 1700/– | 3750/– | 7750/– | 10550/– |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1700/– | 3700/– | 7800/– | 10600/– |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1650/– | 3650/– | 7700/– | 10400/– |
| 25 | கொதிகலன் உற்பத்தி செய்தல் | 1600/– | 3800/– | 7800/– | 10800/– |
| 26 | காற்றுப் பதனிகளை உற்பத்தி செய்தல் | 1600/– | 3750/– | 7800/– | 10700/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 1600/– | 3700/– | 7750/– | 10600/– |
| 28 | அனைத்து வகையான எழுதுபொருட்களை உற்பத்தி செய்தல் | 1550/– | 3600/– | 7700/– | 10400/– |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7600/– | 10300/– |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களை உற்பத்தி செய்தல் | 1700/– | 3800/– | 8000/– | 11000/– |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 1700/– | 3700/– | 7800/– | 10800/– |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 1700/– | 3800/– | 8000/– | 11300/– |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 1500/– | 3600/– | 7650/– | 10300/– |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3600/– | 7700/– | 10500/– |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 1600/– | 3700/– | 7800/– | 10800/– |
| 36 | துப்பரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3700/– | 7800/– | 10500/– |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1500/– | 3600/– | 7500/– | 10200/– |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1550/– | 3600/– | 7750/– | 10500/– |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 1750/– | 3850/– | 8000/– | 11500/– |
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1700/– | 3800/– | 8000/– | 11000/– |
| 41 | அனைத்து வகையான மர/பிளைவுட்/சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 1600/– | 3650/– | 7800/– | 10500/– |
| 42 | அனைத்து வகையான வன்பொருள்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 1550/– | 3650/– | 7750/– | 10550/– |
| 43 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3600/– | 7700/– | 10500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1550/– | 3650/– | 7700/– | 10600/– |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1600/– | 3700/– | 7800/– | 10600/– |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1600/– | 3700/– | 7750/– | 10500/– |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10200/– |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 1600/– | 3650/– | 7700/– | 10500/– |
| 49 | உரிமம் பெற்று தயாரிப்பு பணியினை மேற்கொள்ள வேண்டும் என்று நகராட்சி கருதும் மேற்குறிப்பிட்ட இனங்கனள தவிர இதர இனங்கள் | 1550/– | 3700/– | 7800/– | 11000/– |

**அட்டவணை II**

**[See rules 289 (1), (2) and (5)]**

**1. பொருந்தும் தன்மை:**

இந்த அட்டவணை, எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும், அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

**2. பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:–**

1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.
2. 2013–ம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் (2013–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள், வங்கிகள், நிதிநிறுவனங்கள்
3. சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing Centres) மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.
4. 1959–ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934 –ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும் 1952–ம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் (1957–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள்

5. 2010–ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் 23).

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்.

1. <u>உரிமக் கட்டணம் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)</u>

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 700/– | 10,000/– |

2. <u>வர்த்தகங்கள் அல்லது வியாபாரங்களின் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)</u>

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் (700 – 10000) |
|---|---|---|
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 900/- |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு சர்வீஸ் மையங்கள் | 750/- |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை விற்பனை செய்தல் | 1000/- |
| 8 | கழிவுத்தாள் கடை/ பழைய வேண்டாத பொருட்கள் | 1250/- |
| 9 | நூற்பு வேலைகள் | 750/- |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1200/- |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் (Air conditioner) | 800/- |

| | | |
|---|---|---|
| 12 | காற்றழுத்திகள் (Air Compressors) | 700/- |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 14 | எடை இயந்திர நிலையங்கள் (Weighing Machines) | 800/- |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 700/- |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 1500/- |
| 17 | தலைக்கவச கடைகள் | 900/- |
| 18 | இரு சக்கர வாகனகங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 1000/- |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 1500/- |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 1000/- |
| 21 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங் களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500/- |
| 24 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- |
| 25 | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- |
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1200/- |
| 29 | அனைத்து வகையான வன்பொருட்களையும் (Hardwares) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 31 | அனைத்து வகையான எழுதுபொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |

| | | |
|---|---|---|
| 32 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 33 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 34 | அனைத்து வகையான வீட்டுஉபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1200/- |
| 35 | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 4000/- |
| 36 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 37 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (துளவாட சமான்கள்) | 700/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 4000/- |
| 40 | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள்/ டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1800/- |
| 41 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1200/- |
| 42 | அனைத்து வகையான அறைகலன்களையும் (Furnitures) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1200/- |
| 43 | அனைத்து வகையான மர / ப்ளைவுட்/ சன்மைகா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 44 | மர வடிவமைப்புகள் விற்பனை | 800/- |
| 45 | ஷாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 900/- |
| 46 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 47 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 48 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 49 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 50 | அழைப்பிதழ்கள்/ வாழ்த்து அட்டை விற்பனை/ அச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 1000/- |

| | | |
|---|---|---|
| 51 | மருந்துக்கடைகள் | 800/- |
| 52 | மருத்துவ உபகரணங்கள்/சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 53 | மூங்கில், தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 54 | எரியக்கூடிய பொருட்கள், ஃபிலிம் செல்லுலாய்டு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- |
| 55 | புல் மற்றும் வைக்கோலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 56 | முட்டுக்கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல் | 900/- |
| 57 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1400/- |
| 59 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 3500/- |
| 60 | வாகன நிறுத்த நிலையங்கள் | 750/- |
| 61 | திரைப்பட ஆய்வகங்கள் | 3000/- |
| 62 | பார்சல் புக் செய்யுமிடங்கள்/ தூதஞ்சல் (Courier) சேவைகள் | 800/- |
| 63 | கேபிள் டி.வி சேவைகள் | 1400/- |
| 64 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 65 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 700/- |
| 66 | பட்டாணி வறுவல் | 700/- |
| 67 | ஃபேன்சி ஸ்டோர் | 800/- |
| 68 | பஞ்சு மெத்தை/ தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 69 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 700/- |
| 70 | பல்பொருள் அங்காடி | 3000/- |
| 71 | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ–சேவை மற்றும் இணைய நிலையம் | 800/- |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் | 700/- |
| 73 | தாவர நாற்றங்கால் கடைகள் | 3000/- |
| 74 | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 800/- |
| 75 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 700/- |
| 76 | பொற்கொல்லர்கள் | 700/- |
| 77 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 900/- |

| | | |
|---|---|---|
| 78 | டைல்ஸ் / மார்பிள்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1750/- |
| 79 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 80 | முடி வெட்டும் நிலையங்கள் | 700/- |
| 81 | அழகு நிலையங்கள் / தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத /ஸ்பாஸ் (Spa's) | 1200/- |
| 82 | தையல் கடைகள் | 800/- |
| 83 | சலவையகங்கள் | 700/- |
| 84 | வினைல் போர்டு கடைகள் | 700/- |
| 85 | காலணி கடைகள் | 700/- |
| 86 | கைப்பேசி கடைகள் (விற்பனை மற்றும் பழுது பார்த்தல்) | 700/- |
| 87 | மிதி வண்டி மற்றும் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 700/- |
| 88 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 700/- |
| 89 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 3500/- |
| 90 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theatre) | 800/- |
| 91 | அச்சகங்கள் | 700/- |
| 92 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 700/- |
| 93 | துணிகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 800/- |
| 94 | நகைகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 800/- |
| 95 | நெல் அவித்தல் | 700/- |
| 96 | மரம் அறுக்கும் ஆலைகள் | 800/- |
| 97 | FCS ஆலைகள்(Farm and commercial Storage Manufacturing) | 800/- |
| 98 | அரிசி ஆலைகள் | 1500/- |
| 99 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 100 | மீன் இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2500/- |
| 101 | கோழி இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 18000/- |
| 102 | ஆட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 24000/- |
| 103 | கோழி இறைச்சி மற்றும் ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 42000/- |
| 104 | மாட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 105 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |

| | | |
|---|---|---|
| 106 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 900/- |
| 107 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 108 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 109 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 110 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 111 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 112 | மருத்துவ ஆய்வகங்கள் | 1000/- |
| 113 | அனைத்து வகையான செல்லபிராணிகள் கடைகள் | 800/- |
| 114 | அனைத்து வகையான கால்நடைகள்/ பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 115 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 700/- |
| 116 | பால் மற்றும் பால் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- |
| 117 | காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- |
| 118 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 119 | பேக்கரிகள் | 1000/- |
| 120 | பழச்சாறு கடைகள் | 800/- |
| 121 | AMF (Assured Minimum Facility) உடன் டீ கடைகள் | 700/- |
| 122 | நீர்வாழ்வன காட்சி சாலை (Aquarium) | 800/- |
| 123 | ஊறவைத்த தானியங்களை அரைத்தல் | 700/- |
| 124 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 800/- |
| 125 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 1400/- |
| 126 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 800/- |
| 127 | உரிமம் பெற்று வர்த்தகம் செய்ய வேண்டுமென நகராட்சி கருதும் மேற்குறிப்பிட்ட இனங்களை தவிர இதர இனங்கள் | 1000/- |

## SCHEDULE III

**[See rules 289 (1), (2) and (7)]**

**(1) பொருந்தும் தன்மை :– இந்த அட்டவணை**

1. தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.
2. 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான, வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், தங்கும் விடுதிகள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள், அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக்சகூட்டங்களாகப் பயன்படுத்தப்படுகிற அனைத்து பொதுக்கூட்டங்களுக்கும் பொருந்தும்.

**2) உரிம கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

a. தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள். விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம்

| தொழில் விபரம் | குறைந்தபட்சம் மற்றும் அதிகப்பட்ச கட்டணம் |
|---|---|
| (1) | (2) |
| சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள். | குறைந்தபட்சம் ரூ.1000/–<br>அதிகப்பட்ச கட்டணம் ரூ.15000/– |

| தொழில் விபரம் | ஒரு வருடத்திற்கு நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள். | சிற்றுண்டி சாலைக்கு ரூ.1200/– உணவகம், உணவுகூடங்களுக்கு ரூ.2000/– |

b. 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| தொழில் விபரம் | குறைந்தபட்சம் மற்றும் அதிகப்பட்ச கட்டணம் |
|---|---|
| (1) | (2) |

| | |
|---|---|
| 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள் | குறைந்தபட்சம் ரூ.1500/–<br>அதிகப்பட்ச கட்டணம் ரூ.3500/– |

| தொழில் விபரம் | ஒரு வருடத்திற்கு நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். | 1750/– |

c. 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள்.

**விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம்**
**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| தொழில் விபரம் | குறைந்தபட்சம் மற்றும் அதிகப்பட்ச கட்டணம் |
|---|---|
| (1) | (2) |
| 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் | குறைந்தபட்சம் ரூ.3000/–<br>அதிகப்பட்ச கட்டணம் ரூ.30000/– |

| தொழில் விபரம் | ஒரு வருடத்திற்கு நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் | 4000/– |

d. திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள்.

**விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம்**
**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| தொழில் விபரம் | குறைந்தபட்சம் மற்றும் அதிகப்பட்ச கட்டணம் |
|---|---|
| **(1)** | **(2)** |
| **<u>திருமண மண்டபங்கள்</u>**<br>விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | குறைந்தபட்சம் ரூ.3000/–<br>அதிகப்பட்ச கட்டணம் ரூ.30000/– |

| தொழில் விபரம் | ஒரு வருடத்திற்கு நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| **(1)** | **(2)** |
| **<u>திருமண மண்டபங்கள்</u>**<br>விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | **3500/–**<br>**1750/–** |

மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களில் திருமண மண்டபங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.1750/–லிருந்து திருத்தம் செய்து ரூ.3000/– ஆக மறுநிர்ணயம் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் நாள் முதல் வசூலித்து உரிமங்கள் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மேற்கண்ட விவரப்படி உப விதிகள் உருவாக்கி தொழில் உரிமம் கட்டணம் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்ற பின்பு மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.954 (34)**

தாரமங்கலம் நகராட்சி, பொதுமக்களின் பயன்பாட்டிலுள்ள ஆண்கள், பெண்கள் கழிப்பிடங்கள் கீழ்கண்ட வார்டுகளில் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. பராமரிப்பு பணிக்கான கழிப்பிடங்களின் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வார்டு எண். | பராமரிப்பு பணிக்கான மதிப்பீடு ரூ.(ல) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.13, நல்லகிணறு பெண்கள் கழிப்பிடத்தில் பராமரிப்பு மற்றும் எலக்ட்ரிக்கல் உபகரணங்கள். | ரூ.4.50/— |
| 2. | வார்டு எண்.22, செங்குந்தர் மண்டபம் பின்புறம், ஆண்கள் கழிப்பிடத்தில் பராமரிப்பு மற்றும் எலக்ட்ரிக்கல் உபகரணங்கள். | |
| 3. | வார்டு எண்.22, அம்பேத்கார் நகர், பெண்கள் கழிப்பிடத்தில் பராமரிப்பு மற்றும் எலக்ட்ரிக்கல் உபகரணங்கள். | |
| 4. | வார்டு எண்.9, அருணாச்சலம்புதூர், ஆண்கள், பெண்கள் கழிப்பிடத்தில் பராமரிப்பு மற்றும் எலக்ட்ரிக்கல் உபகரணங்கள். | |

மேற்கண்டுள்ள வார்டுகளின் கழிப்பிடங்கள் பராமரிப்பு பணிக்கான செலவினம் ரூ.4.50/— இலட்சம் ஆகும். கழிப்பிட பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்குண்டான செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு: —</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.235/2025/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.955 (35)**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுமக்களின் பயன்பாட்டிலுள்ள ஆண்கள், பெண்கள் கழிப்பிடங்கள் கீழ்கண்ட வார்டுகளில் பழுதடைந்துள்ள நிலையிலுள்ளதால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. பராமரிப்பு பணிக்கான கழிப்பிடங்களின் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வார்டு எண். | பராமரிப்பு பணிக்கான மதிப்பீடு ரூ.(ல) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.20, தெற்கு ரதவீதியில் ஆண்கள், பெண்கள் கழிப்பிடத்தில் பராமரிப்பு மற்றும் எலக்ட்ரிக்கல் உபகரணங்கள். | ரூ.4.50/— |
| 2. | வார்டு எண்.10, பேருந்து நிலையத்தின் பின்புறம் ஆண்கள், பெண்கள் கழிப்பிடத்தில் பராமரிப்பு மற்றும் எலக்ட்ரிக்கல் உபகரணங்கள். | |
| 3. | வார்டு எண்.15, அரசு மருத்துவமனை பின்புறம் பெண்கள் கழிப்பிடத்தில் பராமரிப்பு மற்றும் எலக்ட்ரிக்கல் உபகரணங்கள். | |

மேற்கண்டுள்ள வார்டுகளின் கழிப்பிடங்கள் பராமரிப்பு பணிக்கான செலவினம் ரூ.**4.50/–** இலட்சம் ஆகும். கழிப்பிட பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்குண்டான செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு: –</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.236/2025/இ1)
2. மேற்காணும் செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**